IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.7

| | | |
|---|---|---|
| NAME | : | RAJKUMAR |
| FATHER'S NAME | : | MANICKAM |
| VILLAGE | : | SEITHUNGANALLUR |
| OCCUPATION | : | SETC |
| AGE | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 2nd day of MARCH 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் செய்துங்கநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். திருநெல்வேலி 2 போக்குவரத்தது பணி மணையில் கட்டுபாட்டளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 17.02.2019 ம் தேதி நான் திருநெல்வேலி பணிமணையில் பணியில் இருக்கும் போது தடம் எண் 984 பதிவு எண் TN 01 AN 0922 திருநெல்வேலி to திருப்பதி செல்லும் பேருந்தின் ஓட்டுநராக முருகையா என்பவரையும் நடத்துனராக தியாகராஜன் என்பவரையும் நியமித்து பணி ஒதுக்கீடு செய்தேன். 18.02.2019 ம் தேதி இரவு 7.30 மணியளவில் நடத்துனர் தியாகராஜன் என்பவர் எனக்கு போன் மூலமாக காட்பாடி பக்கத்தில் விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஓட்டுநர் அஜராக்கிரதையால் விபத்து ஏற்பட வில்லை என்றால் சரிதான். அவர் சரியாக தான் ஓட்டினார்ள ன்றும் இறந்தவரின் கவனகுறைவால் விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன் என்றால் சரிதான்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.8

| | | |
|---|---|---|
| NAME | : | THIYAGARAJAN |
| FATHER'S NAME | : | MURUGAN |
| VILLAGE | : | VENKALAPOTTAL |
| OCCUPATION | : | SETC |
| AGE | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 2nd day of MARCH 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் வெண்கலபொட்டலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். திருநெல்வேலி 2 போக்குவரத்தது பணி மணையில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். என்னுடன் ஓட்டுநராக பணி செய்பவர். கடந்த 17.12.2019 ம் தேதி நான் திருநெல்வேலிருந்து தடம் எண் 984 பதிவு எண் TN 01 AN 0922 திருநெல்வேலி to திருப்பதி செல்லும் பேருந்தின் ஓட்டுநராக ஆஜர் எதிரி முருகையா என்பவரும் நடத்துனராக நானும் என்பவரையும் நியமிக்கபட்டு இருந்தோம். பின்னர் திருப்பதி சென்றுவிட்டு அங்கு 4.30 மணிக்கு கிளம்பி திருநெல்வேலி நோக்கி சென்று கொண்டு இருக்கும் போது காட்பாடி செங்குட்டை அருகே செல்லும் போது ஓட்டுநர் தீடீரென்று பிரேக் போட்டார். இறங்கி பார்த்த போது சைக்கிள் வந்த முதியவர் நாங்கள் வந்த பேருந்தின் முன்பாக விழுந்து கிடந்தார். அவர் மயக்க நிலையில் இருந்தார். நானும் ஆஜர் எதிரி சென்று பார்த்தோம். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு மருத்துவமனை அனுப்பி வைத்தார்கள். நானும் ஓட்டுநரும் காவல்நிலையம் சென்றோம். வழக்கு சம்மந்தமாக உயர் அலுவலருக்கு தகவல் தெரிவித்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் நடந்த உடன் போலிசார் சம்பவம் இடம் வந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் தான் என்னை காவல்நிலையம் செல்ல சொன்னார்கள் என்றால் சரிதான். ஓட்டுநர் சரியான பாதையில் நிதனமாக சென்றார் என்றால்சரிதான். ஓட்டுநரின் கவன குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரிதான். சைக்கிள் வந்த நபர் குறுக்கே வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 02.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.